IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

OS.No. 11/2015

Deposition of witness for PW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | வெங்கடேசன் | Caste | : | |
| Father Name | : | ஸ்ரீராமலு ரெட்டி | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17th day of July, 2025.

குறுக்கு விசாரணை

1. நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் சொல்ல அழைப்பாணை ஏதும் வரவில்லை. 3ம் வாதிதான் சாட்சியம் சொல்ல என்னை அழைத்து வந்தார். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தை வழக்கறிஞர்தான் தயார் செய்தார். அதில் நான் கையொப்பம் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்பது எனக்கு நேரடியாக தெரியாது. வழக்கில் என்ன சர்வே எண், எவ்வளவு சொத்துக்கள் விவரம் சேர்த்துள்ளனர் என்பது குறித்து எனக்கு விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

2. தாவா சொத்து எங்கிருந்து பெறப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் பூர்வீக சொத்து ஆகும். பூர்வீக சொத்து யார் பெயரில் இருந்து வந்தது என்று எனக்கு தெரியாது. 3ம் வாதி சாட்சியம் சொல்ல அழைத்ததால் நான் இரண்டு முறை நீதிமன்றத்திற்கு வந்தேன். சுப்பிரமணி எனக்கு தெரிந்தவர் ஆவார். சுப்பிரமணி எனக்கு தெரிந்தவர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் என்னுடைய சாட்சி இவ்வழக்கில் ஏற்றுக்கொள்ளக் கூடியது இல்லை என்றாலும் சரியல்ல.

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF
KATPADI